அக்டோபர்: 27

## வேதத்தை ஆராய்ந்து கற்றுக்கொள்ளல்

### வாசிக்க: ஓசியா 1:1

யூதா தேசத்து ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா, என்பவர்களின் நாட்களிலும், யோவாசின் குமாரனாகிய இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாம் என்பவனின் நாட்களிலும், பெயேரின் குமாரனாகிய ஓசியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம். ஓசியா 1:1. இங்கு ஐந்து ராஜாக்களை குறித்து சொல்லப்பட்டுள்ளது. இன்று நாங்கள் இந்த ராஜாக்களை குறித்து வேதத்தை ஆராய்ந்து பார்க்கப்போகிறோம். முதலாவது வேதத்தை தியானித்து படிக்க வேண்டும். இரண்டாவது வேதத்தை ஆராய்ந்து படிக்க வேண்டும். இவர்கள் எத்தனை ஆண்டு ஆட்சி செய்தார்கள், தகப்பன் பெயர் என்ன, ஆட்சி செய்த இடம், எப்படிப்பட்டவர்கள், வேதத்தில் எங்கே சொல்லப்பட்டுள்ளது என்பனவற்றை பார்க்கலாம். சிறுவயதிலேயே இப்படி ஆராய்ந்து படிப்பீர்களானால். எதிர்காலத்தில் தெளிவான சத்தியத்தை அறிந்தவர்களாயும், போதிப்பவர்களாயும் மாறிவிடுவீர்கள். எனவே ஆராய்ந்து படிப்பதையும் பழக்கமாக்கி கொள்ளுங்கள்.

1. உசியா: இவருக்கு அசரியா என்ற பெயரும் உண்டு. 52 ஆண்டுகள் ஆட்சி செய்தார். தகப்பன் பெயர் அமத்சியா. யூத தேசத்தை ஆண்டுகொண்டார். கர்த்தரின் பார்வைக்கு நல்லதை செய்தார். இவரைக்குறித்து 2இராக்கள் 15:1-2ல் படிக்கலாம்.
2. யோதாம்: 9 வருடங்கள் தனியாகவும், தகப்பனாகிய உசியாவோடு 4 ஆண்டுகளும், மகனாகிய ஆகாசோடு 3 ஆண்டுகளும் மொத்தம் 16 ஆண்டுகள் ஆட்சி செய்தார். தகப்பன் உசியா. யூத தேசத்தை ஆண்டுகொண்டார். கர்த்தரின் பார்வைக்கு நல்லதை செய்தார். இவரைக்குறித்து 2இராஜாக்கள் 15:32-33ல் படிக்கலாம்.
3. ஆகாஸ்: 16 வருடங்கள் ஆட்சி செய்தார். தகப்பன் பெயர் யோதாம். யூத தேசத்தை ஆண்டு கொண்டார். கர்த்தரின் பார்வைக்கு அருவருப்பானதை செய்தார். 2இராஜாக்கள் 16:2ல் இவரைக்குறித்து படிக்கலாம்.
4. எசேக்கியா: 29 வருடங்கள் ஆட்சி செய்தார். தகப்பன் பெயர் ஆகாஸ். யூத தேசத்தை ஆட்சி செய்தார். கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்தார். 2இராஜாக்கள் 18:1-2ல் இவரைக்குறித்து படிக்கலாம்.
5. யெரொபெயாம்: 41 வருடங்கள் ஆட்சி செய்தார். தகப்பன் பெயர் யோவாஸ். இஸ்ரவேலை ஆண்டு கொண்டார். இஸ்ரவேல் மக்களை பாவ வாழ்க்கைக்கு வழிநடத்தினார். 2இராஜாக்கள் 14:23ல் இவரைக் குறித்து படிக்கலாம்.

இஸ்ரவேல் என்பது 10 கோத்திரத்தை உள்ளடக்கிய வட நாடு. யூத இராஜ்ஜியம் என்பது யூதா, பென்யமீனாகிய இரண்டு கோத்திரங்களை உள்ளடக்கிய இராஜ்ஜியமாகும். இன்று அவ்வாறில்லை பொதுவாக இஸ்ரவேல் என்றழைக்கப்படுகிறது. பிள்ளைகளே இன்றைய பாடம் கடினமாயிருந்தால் பெற்றோரின் உதவியோடு படியுங்கள். நண்பர்களோடு கூடியிருந்து ஆராயுங்கள்.

வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. **யோவான் 5:39**

### ஜெபம்

எங்களை நேசிக்கும் பரம தகப்பனே. வேதத்தை எழுதி தந்ததற்கு நன்றியப்பா.

வேதத்தின் மறைபொருட்களை, இரகசியங்களை மகத்துவங்களை ஆராய்ந்து பார்க்க உதவிடுங்கப்பா. ஆமென்